## பிப்ரவரி - 26

**"கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்." - பிலி 4 : 4**

சந்தோஷமாயிருக்கிற மிகவும் அதிகமான கிறிஸ்தவர்களை நாம் பெற்றிருக்க முடியாது. அவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்களானால், அவர்கள் மிகவும் அதிகமாக சந்தோஷமாயிருக்கக்கூடும் என்பதுமல்ல. இந்த சந்தோஷம் அவசியமாக கூச்சல் மிக்கதாய் இருக்கிறதில்லை அவசியமாக எதிரானதாக இருக்கிறதுமல்ல. ஆனபோதிலும், இது அமைதியும், பாக்கியத்தையும், சமாதானத்தையும், ஆத்துமத்தின் மகிழ்ச்சியையும் குறிக்கிறது. சிலர் தவறாக எண்ணுகிற பிரகாரமாக, இந்த சந்தோஷத்தை வெளிப்படையான அறிகுறிகளினாலே ஆரவாரத்துடன் வெளிப்படுத்துதல் தவிர்க்க முடியாதது என்பதை இது குறிக்காது. யார் கர்த்தருக்கு வெகு சமீபத்தில் ஜீவிக்கிறார்களோ, அவர்கள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கக் கூடிய தனிப்பட்ட ஜனங்கள், அவருடைய பாதுகாப்பும் கவனிப்பும் அவர்களுக்கு இருப்பதையும் கிறிஸ்தவர்களாக சகலமும் அவர்களது மிகச் சிறந்த நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்ற அவருடைய வாக்குத்தத்தம் நிச்சயமுள்ளதாயிருக்கிறது என்பதையும் எப்பொழுதும் உணருகிறவர்களும் அவர்களே. **- Z '03, 7 (R 3127)**

கிறிஸ்தவனின் சந்தோஷம் எப்பொழுதும் கர்த்தருக்குள்ளனதாக இருக்கிறது. ஒரு காலத்துக்குரிய காரியங்களில் அல்ல, ஆனால் நித்தியத்தோடு சம்பந்தப்பட்ட காரியங்களில் இருக்கிறது. பிரதிஷ்டையின் காரியங்களில் அதாவது, அதன் கடமைகள், அதன் சலுகைகள், அதன் படிப்பினைகள், அதன் வளர்ச்சி, அதன் கற்பனைகள், அதன் தேர்ச்சிகள் ஆகியவற்றில் இருக்கிறது. நமது ஆசிர்வாதங்களைப் பற்றி இடைவிடாது எண்ணுவது நம்மை சந்தோஷமாயிருக்கச் செய்யும். திரும்பத் திரும்ப மகிழ்ச்சியைத் தரும். நாம் நீதிமானாக்கப்படுவது, நமது பிரதிஷ்டை ஆவியினால் பலப்படுத்தப்படுதல், ஆவிக்குரிய வெளிச்சம், ஆகாரம், வளர்ச்சி, ஜெபங்களும், ஊழியமும், தேவ புத்திரராயும், கிறிஸ்துவோடு சுதந்திரராயுமிருத்தல் ஆகிய இவைகள் எல்லாவற்றையும் கவனிக்கும்போது, சந்தோஷப்படுவதற்கு ஏற்ற சமயமாயிருப்பதைவிட வேறு எந்தவிதமாய் அது இருக்கக் கூடும்? **- P '36, 14.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

உபா 12:18; சாமு 2:1; யோபு 22:26; சங் 5:11; 9:2; 32:11; 35:9; 43:4;63:11; 64:10; 97:11; 104:34; ஏசா 29:19; யோவே 2:23; ஆப 3:18; லூக் 10:21; ரோம 5:2; 12:12; 15:13; 1கொரி 12:26; பிலி 2:18; 3:1; 1தெச 5:16; எபி 3:6; 1பேது 4:13;

**கோபுர வாசிப்பு : Z '14, 291 (R 5544)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் சந்தோஷமுள்ளவனாயிருந்தேனா? ஏன்? எப்படி? அதிலிருந்து விளைந்தது என்ன?